குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.13/2020

அ.சா.3

2024–ம் ஆண்டு டிசம்பர் 13–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | ஜாதி | |
| தந்தை பெயர் | முருகேசன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.16 மணி,

Accused Murugan Present. Advocate Mr.Arunachalam present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் பூசாரிப்பட்டியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு, காலை 05.45 மணியளவில் பூசாரிப்பட்டி இந்திரா நகரில் உள்ள இந்திரா சிலைக்கு அருகில், உள்ள எனது வீட்டிற்கு அருகில் மாதம்மாள் என்பவர் இயற்கை உபாதை கழிக்க வந்தபோது, இருசக்கர வாகனம் அவர் மீது மோதிவிட்டதாக சொன்னார்கள். சுமார் 10 நிமிடம் கழித்து, நான் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தபோது, விபத்தில் அடிப்பட்ட மாதம்மாளை அவரின் மகள் மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார்.

2. பின்பு, விபத்து நடந்து 4 நாட்கள் கழித்து போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். எனது வீட்டையும் மேற்படி மாதிரி வரைபடத்தில் காண்பித்தார்கள். அதற்கு சாட்சியாக இருந்து நான் கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்பபடுகிறது.)**

3. என்னுடன் யார் கையெழுத்து செய்தார்கள் என்று தற்போது எனக்கு நினைவில் இல்லை. போலிசார் விசாரித்தார்கள்.

.2.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. மாதிரி வரைபடம் சதுர வடிவில் வீடுகள் காண்பிக்கப்பட்டுள்ளது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 12.24 மணி,

ஒம்/−ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.